யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ/த) தவணைப் பரீட்சை
மார்ச் - 2014

# அரசியல் விஞ்ஞானம்

நேரம் : 3.00 மணி

## பகுதி - I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

"அரசறிவியல் பல்வேறு பாடப்பரப்புக்களை உள்வாங்கித் தன்னை ஒரு தனியான கற்கை நெறியாக நிலைநிறுத்தியுள்ளது"
பின்வருவனவற்றுள் அரசறிவியலின் இயல்பைச் சிறப்பாக விளக்குவது எது?
1) அரசு பொருளாதார நலன்களை மட்டும் கவனத்தில் கொண்டு செயற்படுதல்
2) சமூகத்தில் இயங்கும் பல்வேறு குழுக்களின் செயற்பாடுகளை ஆராய்தல்
3) சமூகத்தில் நடைமுறைப்படுத்தி நீதியை நிலைநாட்டுவதில் கவனம் செலுத்துதல்
4) சமூகத்திலுள்ள பல்வேறு சமூகக் குழுக்களின் நடத்தைகள் பற்றி ஆராய்தல்
5) அரசறிவியல் அதிகாரத்தையும் அதிகாரத் தொடர்புகளையும் ஆராய்தல்

தத்துவார்த்த அணுகுமுறையுடன் எதுவிதத்திலும் தொடர்புபடாத அம்சம் எது?
1) பகுத்தறிவு இங்கு பயன்படுத்தப்படுவதில்லை
2) சமூக நிறுவனங்களையும் தனிமனிதர்களையும் சமூக ஒழுங்குகளையும் முதன்மைப் படுத்தி ஆய்வு செய்யும் முறையாகும்
3) இறையியல் கோட்பாடுகளுடன் தொடர்புபட்டுள்ளது
4) அரசு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு இது முக்கியத்துவம் அளிக்கிறது
5) அரசறிவியலுக்கான அணுகுமுறைகளில் மிகவும் பழமையானதாகும்

அரசறிவியலின் பாடப்பரப்புக்களில் பொருத்தமற்றது எதுவாகும்?
1) மனிதர்களின் சமூகத்தொடர்புகள் பற்றியதாகும்
2) அரசியல் தத்துவங்கள், அரசியல் சிந்தனை, அரசியற் கோட்பாடுகள் பற்றியதாகும்
3) அரசாங்க நிறுவனங்கள் பற்றிய ஆய்வாகும்
4) மோதல் முகாமைத்துவம், மோதல், தீர்த்தல் பற்றியதாகும்
5) அரசின் கொள்கையாக்கத்தையும் அதன் நடைமுறைகளையும் கற்பதாகும்

அரசறிவியலின் நோக்கமல்லாதது எதுவாகும்?
1) சமூக கலாசார விழுமியங்கள் பற்றிய அறிவை மேம்படுத்துதல்
2) குடிமக்கள் தமது அரசியல் உரிமைகளையும் கடமைகளையும் உணர்ந்து கொள்ளுதல்
3) நாட்டு மக்களின் சமூகப் பொறுப்புக்களைப் பற்றிய அறிவை விருத்தி செய்தல்
4) மக்கள் அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான அறிவை வழங்கல்
5) தேசிய, சர்வதேச அரசியலில் சமநிலையான புரிந்துணர்வைப் பெறல்

தலையிடா அரச கொள்கையின் இயல்புகளுள் அடங்காதது எது?
1) அரசின் பணி சட்டம், சமாதானத்தை நிலைநாட்டுதல்
2) அரசு பொருளாதார நடவடிக்கையிலிருந்து முற்றிலும் விடுபட்டிருத்தல்

agaram.lk



Scanned with CamScanner

3) பொருளாதார நெறிப்படுத்தல்கள் தனியாட்களால் மேற்கொள்ளப்பட்டிருத்தல்
4) வர்த்தக சக்திகளால் பொருளாதாரம் தீர்மானிக்கப்படல்
5) அரசு, மக்கள் தமது தனித்துவத்தை விருத்தி செய்ய நிபந்தனைகளை முன்வைத்தல்

06. அரசாங்கம் பற்றிய சரியான கூற்றுக்களின் சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A - மூன்று துறைகளைக் கொண்டதாகும்
B - மனித சமூகத்தை நிருவகிக்கும் ஸ்தாபனமாகும்
C - மாற்றங்களுக்கு உட்படாத ஸ்தாபனமாகும்
D - உள்ளக, வெளியகப் பணிகளைச் செய்கின்றது
E - இறைமை அதிகாரத்தைச் செயற்படுத்தும் முகவராண்மையாகும்

1) BAED 2) DCAE 3) BCED 4) ACBD 5) ABCE

07. சனநாயக ஆட்சியின் சில மூலத்துவங்களாவன

A - யாப்புறு அரசாங்கம் மற்றும் யாப்பை மதித்தல்
B - மனித உரிமைகளைக் கட்டுப்படுத்துதல்
C - ஊடகங்களுக்கான சுதந்திரத்தை மதித்தலும் பாதுகாத்தலும்
D - அமுக்கக் குழுக்களினதும் அரசியல் கட்சிகளினதும் செயற்பாட்டுக்குத் தடை விதிக்காதிருத்தல்
E - சட்டத்தின் ஆட்சியை மதித்தலும் நீதித்துறையின் சுதந்திரமும்

1) ABCE 2) BADE 3) BCDE 4) ACDE 5) ABCD

08. அரசியலமைப்பு என்பதற்கான சரியான சேர்மானம் எது?

A - சனநாயக ஆட்சியின் அடித்தளமாகும்
B - நாட்டின் அடிப்படைச் சட்டமாகும்
C - அரசையும் அரசாங்கத்தையும் ஒழுங்குபடுத்தும் மூலக் கொள்கைகளின் தொகுப்பாகும்
D - அரசாங்கத்தின் சட்ட முறைத் தளமாகும்
E - அரசின் அடிப்படை நோக்கங்களை விபரிக்கும் ஆவணமாகும்

1) BADE 2) ACBD 3) ACED 4) ACDE 5) ABCE

09. அரசு பற்றிய பாசிசக் கோட்பாட்டின் சரியான சேர்மானம் எது?

A - அரசின் தோற்றம் ஒப்பந்தத்தின் மூலம் உருவானதாகும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது
B - அரசின் அதிகாரம் தனிமுதன்மையானதாகும்
C - மக்களுக்காக அரசன்றி அரசுக்காகவே மக்களாவர்
D - அரசு அனைத்துக்கும் மேலானதாகும்
E - தனிமனித அடிப்படைச் சுதந்திரங்களுக்கு தடை உள்ளது

1) ABCD 2) BCDE 3) ACDE 4) ABDE 5) ABCE

10. வலு வேறாக்கல் கோட்பாடு

A - அரசாங்கத்தின் பிரதான பணிகளைப் பிரிக்கவேண்டுமெனக் கூறுகிறது
B - தாராள சனநாயக ஆட்சிக்கு வலுச்சேர்த்தது
C - பிரஜைகளின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு ஏற்பாடாகும்
D - மொன்டெஸ்கியூ, போடின் என்போர் இதற்கு வலுச் சேர்த்த அறிஞர்கள் ஆவார்கள்
E - பாசிசம், நாஸிஸம் போன்ற ஆட்சி முறைகளுக்கும் இது பொருத்தமானதாக அமைந்தது

1) BACE 2) BCDE 3) ABDC 4) ACDE 5) ABDE



agaram.lk

Scanned with CamScanner

11. விகிதாசார பிரதிநித்துவ முறையிலான தேர்தலின் இயல்புகள்

A - விகிதாசார அடிப்படையில் ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல்

B - இடைத் தேர்தல்களுக்கு இடமளிக்கப்படுவதில்லை

C - சுயேச்சைக் குழுக்களும் தேர்தல்களில் பங்கேற்க முடியும்

D - குறைவான வாக்குகளைப் பெறுகின்ற கட்சிகளுக்கு தலா ஒரு போனஸ் ஆசனம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

E - சிறுபான்மை இனங்களைச் சேர்ந்ததோரும் பிரதிநிதித்துவம் பெற வாய்ப்புண்டு

1) BCDE 2) BADC 3) ACDE 4) ABDE 5) BACE

12. சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு நவீன அரசுகளில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள்

A - அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் சமவாயத்தை உட்படுத்துதல்

B - சுதந்திரமான ஊடகத்துறையை ஸ்தாபித்தல்

C - மக்களுக்கு விழிப்பூட்டும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்

D - பொருளாதார நீதியை உருவாக்குதல்

E - நிர்வாகத்துறையின் கட்டுப்பாட்டில் நீதித்துறையை செயலாற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்

1) ACED 2) BCDE 3) ADBC 4) ABDE 5) ABCE

13. ஒற்றையாட்சி முறையின் அடிப்படைகளாவன

A - மத்திய, பிராந்திய, ஒருமைப்பாடு என்ற மூன்று பட்டியல்களில் அதிகாரப் பகிர்வு செய்யப்படல்

B - அனைத்து அதிகாரங்களும் ஒரு தனியான மத்திய அமைப்பிடம் மையப்படுத்தப்பட்டிருத்தல்

C - உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கு அதிகாரங்களைப் பிரித்து வழங்குதல்

D - அதிகாரம் மத்திய அரசின் மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படல்

E - சனத்தொகை, நிலப்பரப்பளவு குறைந்த நாடுகளுக்கு உகந்ததாகும்

1) CBDE 2) BACE 3) CADB 4) CAED 5) BADE

agaram.lk

14. சனாதிபதி அரசாங்க முறையின் பண்புகளாவன

A - அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு பின்பற்றப்படுதல்

B - பெயரளவு நிர்வாகமும், உண்மை நிர்வாகமும் செயற்படுதல்

C - சட்டத்துறைக்குப் புறம்பான நிர்வாகத்துறை காணப்படல்

D - வினைத்திறன் மிக்க ஆட்சி முறையாக இருத்தல்

E - சட்டத்துறைக்கு அப்பால் அமைச்சரவை நியமனம் இடம்பெறல்

1) CBED 2) ABEC 3) CADB 4) ACED 5) DBEA

15. தேசிய அரசு முறையின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளின் பொருத்தமான சேர்மானம்

A - மானிய முறையின் எழுச்சி

B - பாப்பாண்டவரின் அதிகார வீழ்ச்சி

C - கைத்தொழில் புரட்சி

D - மறுமலர்ச்சி

E - கிறீஸ்தவ சமயத்தில் ஏற்பட்ட சீர்திருத்தங்கள்

1) BAED 2) CBAD 3) BACE 4) ACDE 5) CBED



Scanned with CamScanner

**16 தொடக்கம் 28 வினாக்களில் உள்ள ஐந்து கூற்றுக்களுள் ஒன்று பிழையானதாகும். பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.**

16. குடி முனைப்பு என்பது
   1) மக்களின் அரசியல் அதிகாரத்தை வெளிப்படுத்துவதாகும்
   2) சட்டவாக்க சபையின் சட்டவாக்க அதிகாரத்தை மட்டுப்படுத்துவதாகும்
   3) மக்கள் தமது பிரதிநிதிகளை தேர்தல் மூலம் காலத்துக்குக் காலம் தெரிவு செய்வதற்கான சிறந்த ஏற்பாடாகும்
   4) சட்டமியற்றுதலில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்கிறது
   5) மக்களாட்சியை வெளிப்படுத்துகின்றது

17. நவீன அரசின் இயல்புகள்
   1) அரசியல் ரீதியாக நவீனமயமாகாதவை
   2) பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடைந்தவை
   3) உயர் கலாசாரம் கொண்டவை
   4) சமூகப் பல்வகைமை கொண்டவை
   5) நாட்டைக் கட்டியெழுப்புவதில் பிரச்சனைகளை எதிர்கொள்பவை

18. தாராண்மைவாத சனநாயக அரசுகள் சிறப்பாகச் செயற்பட அவசியமான அம்சங்கள்
   1) சட்டத்தின் ஆட்சி
   2) சர்வசனவாக்குரிமை
   3) மட்டுப்படுத்தப்பட்ட ஊடக சுதந்திரம்
   4) நீதித்துறையின் சுதந்திரம்
   5) குறித்த காலத்துக்குக் காலம் தேர்தல்கள்

19. சட்டவாக்கத் துறையின் பணிகளாவன
   1) நீதிப் புனராய்வு
   2) சட்டமியற்றுதல்
   3) பொதுசன அபிப்பிராயத்தைப் பிரதிபலித்தல்
   4) அரசியல் யாப்புப் பணிகள்
   5) நிதிநிர்வாகப் பணிகள்

agaram.lk

20. கபினட் அரசாங்கம் என்பது
   1) துரித அரசியல் அபிவிருத்திக்கு உகந்த ஆட்சிமுறையாக இருத்தல்
   2) சனநாயகத் தன்மையை இயல்பாகக் கொண்ட ஆட்சிமுறையாக இருத்தல்
   3) மக்கள் மன்றத்துக்கும் பொறுப்புடைய குழுவாகச் செயற்படல்
   4) நித்தமும் சட்டத்துறையின் தயவில் இருத்தல்
   5) இரட்டை நிர்வாகிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டு செயற்படும் ஆட்சி முறையாக இருத்தல்

21. அரசியல் கட்சி என்பது
   1) அரசியல் கலாசாரத்தை உருவாக்கும் பிரதான முகவராகத் தொழிற்படுதல்
   2) ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையில் இணைப்பாளராகத் தொழிற்படுதல்
   3) அரசியல் தலைவர்களுக்கு பயிற்சி வழங்கும் பயிற்றுவிப்பாளராகத் தொழிற்படுதல்
   4) அரசியல் தலைவர்களை ஆட்சேர்க்கும் முகவராகச் செயற்படுத்தல்
   5) மக்களிடையே அரசியல் பிரிவினைகளை ஏற்படுத்தும் எண்ணத்துடன் கொள்கைகளை ஏற்படுத்தும் நிறுவனங்களாகும்

22. அமுக்கக் குழுக்கள் என்பது
   1) ஜனநாயக அரசியலின் முக்கிய செயற்பாட்டாளராகச் செயற்படுதல்
   2) பாசிச அரசியலின் முக்கிய கொள்கை வகுப்பாளராக இருத்தல்
   3) நவீனத்துவ அரசியலில் நலன் பேண் குழுக்களாக அழைக்கப்படுதல்



Scanned with CamScanner

4) தனிப்பட்ட நலன்களை மட்டும் மேம்படுத்துவதில் ஈடுபடுதல்
5) அரசாங்கத்தின் பொதுக் கொள்கை உருவாக்கத்தில் ஏதோ ஒரு வகையில் செல்வாக்குச் செலுத்துதல்

23. சமஷ்டி முறையின் அடிப்படைகளாவன
1) பலவீனமான மத்திய அரசாங்கம் மற்றும் பலமான சமஷ்டி அலகுகள்
2) அதிகாரப் பங்கீடு
3) எழுதப்பட்ட நெகிழாயாப்பு
4) சமஷ்டி அலகுகளுக்கான சமமான கவனிப்பு
5) அரசியலமைப்பின் பாதுகாவலனாகச் செயற்படும் சுதந்திரமான நீதித்துறை

24. பின்வருவனவற்றுள் சமூக உரிமை என்பது
1) அமைதியான முறையில் கூட்டங்களை நடாத்துதல்
2) விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதும் அதன் கொள்கைகளை தெரியப்படுத்துதலும்
3) விரும்பிய மொழியில் கல்வி பயிலுதல்
4) விரும்பிய தொழிலை மேற்கொண்டு வருமானத்தை ஈட்டுதல்
5) விரும்பிய இடத்தில் குடியேறுதல்

25. நேசக் கூட்ட மைப்பாட்சி அல்லது கூட்டுச் சமஷ்டி என்பது
1) ஒற்றையாட்சி, கூட்டாட்சி ஆகிய இரண்டு பண்புகளையும் கொண்டது
2) பிராந்திய அரசுகள் தமது தனித்துவத்தினைப் பாதுகாக்கும்
3) அரசாங்கத்தின் ஸ்திரமின்மை
4) பலம் வாய்ந்த பிராந்திய அரசு
5) பிராந்திய அரசுகள் தமக்கிடையே ஐக்கியமாகச் செயற்படல்

(25X2=50 புள்ளிகள்)

## பகுதி II

agaram.lk

**A பகுதியிலுள்ள எல்லா வினாக்களுக்கும் B பகுதியிலுள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளிக்குக.**

### பகுதி - A

1) * அரசு என்பது ஒரு சமூகத் தாபனமாகும்
* அரசு என்பது ஒரு வர்க்கக் கருவியாகும்

அரசு பற்றி மேற்குறிப்பிட்ட இரண்டு வரைவிலக்கணங்களையும் முன்வைத்த இரண்டு அரசியல் சிந்தனைவாதக் குழுவினரது பெயர்களைக் குறிப்பிடுக.

1. ..............................................................................................................

2. ..............................................................................................................

2) மனிதனின் அரசியல் நடத்தையைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் அரசியல் தவிர்ந்த இரு காரணிகளைக் குறிப்பிடுக.

1. ..............................................................................................................

2. ..............................................................................................................



Scanned with CamScanner

3) 20 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் சிவில் சமூகம் என்ற எண்ணக்கரு அர விஞ்ஞானத்தில் முன்னிலைக்கு வருவதில் செல்வாக்குச் செலுத்திய இரு காரணிகளைக் குறிப்பி

1. ..........................................................................................................

2. ..........................................................................................................

4) முறைமைப் பகுப்பாய்வு அணுகுமுறையினை முன்வைத்த இரண்டு அறிஞர்களைத் தருக.

1. ..........................................................................................................

2. ..........................................................................................................

5) பின்வரும் நூல்களை எழுதியவர்களின் பெயர்களைத் தருக.

* அரசியல் இலக்கணம்
* சட்டத்தின் உயிர்

1. ..........................................................................................................

2. ..........................................................................................................

6) அரசியல் கலாசாரத்தின் வகைகள் இரண்டு தருக.

1. ..........................................................................................................

2. ..........................................................................................................

7) மந்திரி சபையின் நிறைவேற்றுத் துறையின் இரண்டு பகுதிகளும் எவை?

1. ..........................................................................................................

2. ..........................................................................................................

8) விகிதாசார பிரதிநித்துவ முறையின் பண்புகள் இரண்டு தருக.

1. ..........................................................................................................

2. ..........................................................................................................

9) சனநாயக ஆட்சிமுறையில் பொதுசன அபிப்பிராயத்தின் முக்கியத்துவம் இரண்டு எழுதுக.

1. ..........................................................................................................

2. ..........................................................................................................

10) அமுக்கக் குழுக்களுள் இரண்டு வகையை எழுதுக.

1. ..........................................................................................................

2. ..........................................................................................................

(10X1=10 புள்ளிகள்)



agaram.lk

Scanned with CamScanner

## பகுதி - B

1. அ) அரசுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான வேறுபாட்டினை விளக்குக.
   ஆ) அரசறிவியலைக் கற்கும் முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(10 X 2 = 20 புள்ளிகள்)

2. எவையேனும் இரண்டிற்கு விளக்கம் தருக.
   அ) அரசியல் கட்சிக்கான வரைவிலக்கணமும் பணிகளும்
   ஆ) வலுவேறாக்கத்தின் அவசியம்
   இ) விகிதாசார பிரதிநித்துவ தேர்தல்முறை
   ஈ) ஒற்றையாட்சியிலிருந்து கூட்டாட்சி வேறுபடும் தன்மை

(10 X 2 = 20 புள்ளிகள்)

3. பின்வரும் எண்ணக்கருக்களில் இரண்டை விளக்குக.
   அ) உரிமைகள்
   ஆ) அரசியல் யாப்பின் வகிபங்கு
   இ) நல்லாட்சி
   ஈ) ஊடக ஜனநாயகம்

(10 X 2 = 20 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றில் இரண்டு விடயங்கள் பற்றி கருத்துரைக்குக.
   அ) மந்திரிசபை ஆட்சிமுறையின் பண்புகள்
   ஆ) சிவில்சமூகம்
   இ) அரசியல் உயர் குழாமினர்
   ஈ) மனிதர்கள் சட்டத்திற்குக் கீழ்ப்படிதலுக்கான காரணங்கள்

(10 X 2 = 20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner